[2020 மார்ச் 23

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட என். வேடப்பட்டியில், 3,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அந்தப் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு செய்தித் துறை மற்றும் அம்மாவட்டத்தின் அமைச்சர் அவர்களும் கோரியுள்ளார்கள். எனவே, வேடப்பட்டி ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கைக்கேற்ப, கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள்.

163—

மகப்பேறு மருத்துவமனை

***57023—திரு. R.D. சேகர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் அனைத்து வசதிகளுடன்கூடிய மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கக்கூடிய மகப்பேறு சிகிச்சை மையம், சென்னையில் பல்வேறு வசதிகளை உள்ளடக்கிய எழும்பூர் அரசு தாய்–சேய் மருத்துவமனை 1,025 படுக்கைகளோடும், திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் காந்தி அரசு தாய்–சேய் மருத்துவமனை 695 படுக்கைக

2020 மார்ச் 23]

வசதிகளோடும், அரசு RSRM மருத்துவமனை 510 படுக்கை வசதிகளோடும், அதேபோன்று மிக விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையம் ஆகியவை அனைத்தும் இயங்குகின்ற காரணத்தினால், பெரம்பூரில் தற்போது மகப்பேறு மையத்தைத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் இதயங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், அம்மாவின் நல்லாட்சியை நடத்திவரும், சேலத்து சிங்கம், விவசாயிகளின் நண்பன், தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், ஆட்சிக்கும், கட்சிக்கும் பாலமாக விளங்கி வருகின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

விருகம்பாக்கம் தொகுதிக்குட்பட்ட அரசு புறநகர் மருத்துவமனை விருகம்பாக்கத்தில் உள்ளது. இந்த மருத்துவமனை விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, வேளச்சேரி, தி. நகர் மற்றும் ஆலந்தூர் ஆகியவற்றின் நடுவே உள்ளது. இங்கு ஏழையெளிய மக்கள் அதிகம் வசித்து வருகின்றார்கள். தினமும் 500–க்கும் மேற்பட்ட நோயாளிகள் இம்மருத்துவமனைக்கு வருகின்ற காரணத்தினால், அந்த மருத்துவமனையை தரம் உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், மகப்பேறு மருத்துவமனை இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், பெண்களுக்காக மகப்பேறு மருத்துவமனையை உருவாக்கித் தருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின்

கோரிக்கையின்மீது அரசு உரிய ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என வாழ்ந்து மறைந்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா வழியிலே சிறப்பாகச் செயல்படுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய தொகுதியான வால்பாறை மேல் பகுதியிலே இருக்கின்ற அரசு மருத்துவமனையிலே இதுவரை மகப்பேறு மருத்துவர் இல்லாமல் இருந்தது. தற்போது 3 மாதங்களுக்கு முன்பு, முதுநிலை படித்த மருத்துவர் ஒருவர் வந்திருக்கிறார். ஆனால், அங்கு இரத்த சேமிப்பு வங்கி இல்லை. சென்ற வாரம் Caesarean operation செய்ததன்மூலம் இரண்டு குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இங்கே இருக்கின்ற கர்ப்பிணித் தாய்மார்கள் பொள்ளாச்சி வரவேண்டியிருக்கிறது. இரத்த சேமிப்பு வங்கி இருந்தால் மருத்துவர்கள் operation செய்து குழந்தைகள் பிறப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த சேமிப்பு வங்கி அமைக்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும். மருத்துவர்கள் குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். எதிர்வரக்கூடிய தடுப்பு நடவடிக்கைகளை மனதிலே வைத்துக்கொண்டு இந்த வாரத்தில் உடனடியாக, போர்க்கால அடிப்படையில், M.R.B., மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் 1,500 lab

2020 மார்ச் 23]

technicians, 500 மருத்துவர்கள், 1,000 செவிலியர்களை அரசு பணி நியமனம் செய்யவிருக்கின்றது என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நி. சதன் பிரபாகர் அவர்கள்.

திரு. நி. சதன் பிரபாகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அருள்மிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு இன்றைக்கு சீரோடும், சிறப்போடும், துணிவோடும் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு சேலத்து சிங்கம், நமது குடிமராமத்து நாயகன், காவேரி காப்பாளன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகின்றேன். நமது ஜல்லிக்கட்டு நாயகன், எளிமையின் சின்னம், அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் பணிவோடு வணங்குகிறேன்.

இன்றைக்கு உலகத்தில் அத்தனை நாடுகளும், எத்தனையோ வளர்ந்த நாடுகளும், மக்கள்தொகை குறைவான நாடுகளும் கொரோனா வைரஸைக் கண்டு பயந்து, அச்சத்தோடு இருக்கின்ற இந்த நாட்களில், சிறப்பான நடவடிக்கைகளின்மூலம் தமிழகத்தில் கொரோனா வைரஸ் அதிகம் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கும் நமது தமிழக முதல்வர் அவர்களுக்கும், தமிழக துணை முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு தோள் நின்று சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், ஒரு மருத்துவக் கல்லூரியை வழங்கியதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது இராமநாதபுரத்திலுள்ள மருத்துவமனையை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக மாற்றும்பட்சத்தில் பரமக்குடியிலுள்ள மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக மாற்றித் தர வேண்டுமென்ற கோரிக்கையை நான் பணிவோடு வைக்கின்றேன்.

முற்பகல் 11–15

அதோடுமட்டுமல்லாமல், பரமக்குடியிலுள்ள மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக மாற்றித் தரும்பட்சத்தில், பார்த்திபனூரில் உள்ள PHC–ஐ தாலுகா மருத்துவமனையாக மாற்றித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறை, உள்ளாட்சித் துறை, சுகாதாரத் துறை, வருவாய்த் துறை உள்ளிட்ட அத்தனை துறை ஊழியர்களும் மிகச் சிறப்பாகப் பணியாற்றியதைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் எல்லோரும் நேற்றையதினம் கைதட்டி தங்களது பாராட்டுகளை அவர்களுக்குத் தெரிவித்தார்கள். காவல் துறை உள்ளிட்ட அத்தனை நண்பர்களுக்கும் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தார்கள். ஆனால், அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து செயல்பட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் உள்ளிட்ட அத்தனை அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், அனைவரும் எழுந்து நின்று, கைதட்டி, நன்றி தெரிவிக்க, தாங்கள் அனுமதியை வழங்க வேண்டுமென்று பணிவோடு கூறி, நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி அமைந்துவிட்ட காரணத்தினால், பரமக்குடியில் மாவட்ட தலைமை மருத்துவமனையையும், பார்த்திபனூரில் தாலுகா மருத்துவமனையையும் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்றார். தற்போது, மருத்துவக் கல்லூரி வழங்கிவிட்ட சூழ்நிலையில், ஒரு மருத்துவக் கல்லூரி அமையும்போது, புதிய மாவட்ட தலைமை மருத்துவமனை அமைக்க வழிவகை தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் அன்பான

2020 மார்ச் 23]

கோரிக்கைக்கேற்ப பரமக்குடி மருத்துவமனைக்கும், பார்த்திபனூர் மருத்துவமனைக்கும் என்னென்ன வசதிகள் வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்களோ, அந்த வசதிகளை அரசு ஆய்வுசெய்து, செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

164—

பேருந்து வசதி

***36317—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் முதல் எர்ணாகுளம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர்–எர்ணாகுளம் தடம், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தடத்தில் பேருந்துகள் இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் தமிழ்நாடு–கேரளா ஆகிய இரு மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது பரிசீலிக்க இயலும். மேலும், தற்சமயம் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பாக 730 UD தடத்தில் செங்கோட்டையிலிருந்து, எர்ணாகுளத்திற்கு ஓர் அதிநவீன சொகுசுப் பேருந்து திண்டுக்கல் வழியாக தினசரி இயக்கப்படுகிறது. வேடசந்தூர்–எர்ணாகுளம் செல்லும் பயணிகள் புறநகர், நகரப் பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திண்டுக்கல் சென்று மேற்கூறிய பேருந்து வசதியைப் பயன்படுத்தி எர்ணாகுளம் சென்றடையலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.